**48 நாரைக்கு முக்தி கொடுத்த படலம்**

பாண்டிய நாட்டில் ஓர் தாமரைகுளத்தில் உள்ள மீன்களை உண்டு ஓர் நாரை வாழ்ந்து வந்தது. மழையின்மையால் இக்குளம் வற்றி இரைக்கிடைக்காமல் நாரை தவித்தது. இரைத் தேடிசெல்கையில் ஓர் காட்டில் சந்தியாமடம் என்ற தடாகத்தை அடைந்தது. அங்கு எண்ணற்றமீன்கள் இருந்தன. முனிவர்கள் அந்த தடாகத்தில் குளித்து எழும் சமயம் மீன்கள் அவர்கள்மேனியெல்லாம் தழுவிச் சென்றன. அதைக் கண்ட இந்த நாரை இம்முனிவர்களைத் தீண்டிச்சென்ற மீன்களை தான் உண்ணுவது தகாது என்று எண்ணியது.

முனிவர்கள் தடாகத்தில் குளித்து, மதுரைப் புராணத்தை ஓதிவந்தனர். அதில் லிங்கத்தின்சிறப்பும், மதுரைப் பதியின் சிறப்பும், பொற்றாமரைத் தீர்த்தத்தின் சிறப்பும் கூறப்பட்டது. இதைக்கேட்ட நாரை அறியாமை நீங்கி, ஞானம் பெற்றது.

பின் மதுரை அடைந்து பொற்றாமரைத் தீர்த்தத்தில் நீராடி, சொக்நாதரை வலம் வந்தது. இவ்வாறு பதினைந்து நாள் வழிப்பட்டது. பதினாறாம் நாள் நீராடுகையில் துள்ளுகிறமீன்களைப் பிடித்து உண்ண எண்ணம் கொண்டது. ஐயனின் அருளால் அறிவுப் பெற்று, தனக்குஇம்மாதிரியான ஆசை வந்ததை எண்ணி வருந்திற்று. மீன்களை உண்ணுதலை தவிர்த்துஅங்கேயே தங்கியிருந்தது சிவபெருமானிடம் தனக்கு நற்கதிஅருளுமாறு வேண்டி நின்றது. அந்நாரைக்கு எம்பெருமான்காட்சியளித்தார்.

அந்நாரை, தன் இனத்தவர்கள் மீன்களை பிடித்து உண்டு பாவிகளாகாமல் இருக்க, பொற்றாமரைக் குளம் எப்பொழுதும் மீன்களற்றதாக இருக்க வேண்டும் என வேண்டியதுடன், தன்னை சிவலோகத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு ஐயனிடம் வேண்டிற்று. தன் இனம் தவிர மற்றஇனப்பறவைகளும நற்கதி அடைய வரம் பெற்றது. ஐயனும் அவ்வாறே வரம்அருளினார். நாரையும் சிவபதம் அடைந்தது.

பொற்றாமரைக் குளத்தில் அன்று முதல் இன்று வரை எந்த நீர் வாழ் உயிரினங்களும் வாழ்வதில்லை.

**பல்லவி**

முனிவர்கள் நீராடும் தடாகத்தில் உள்ள
புண்ணிய மீன்களை நாரை உண்ணத் தயங்கிற்று

**அனுபல்லவி**

கனிவுடன் அவர் கூறும் உன் கீர்த்தியைக் கேட்ட பின்
பதினைந்து நாள் வணங்கி விரதமிருந்து

**சரணம்**

பதினாறாம் நாளன்று மீனுண்ண வந்த ஆசை
அறவே அடங்கச் செய்து பரகதியும் தந்து அப்
பதி நீரை மீனற செய்து நாரை சொல் படி
பறவைகள் பாபியாகாதிருக்க வழி செய்தீர்